25.02.2026

O.S.No. 255/2023

PW1- செல்வராஜ் – த/பெ. பொன்னுசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ராஜேந்திரன் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கில் 2 தபசில் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. 2ம் தபசில் சொத்தான சுவர் மீது தான் வழக்கு உள்ளது என்றால் சரிதான்.

4. 2ம் தபசில் சொத்தான சுவரானது கிழமேல் சுவர் என்றால் சரிதான்.

5. 2ம் தபசில் சொத்திற்கு வடபுறம் என் சொத்தும், தென்புறம் 1ம் பிரதிவாதியான என் சகோதரர் சொத்தும் உள்ளது என்றால் சரிதான்.

6. எனக்கு சொத்தானது என் தகப்பனார் எழுதி வைத்த ஏற்பாட்டு ஆவணம் வா.சா.ஆ.1ன் படி பாத்தியம் என்றால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதிக்கும் என் தந்தை எழுதி வைத்த ஏற்பாட்டு ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

7. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தின் சர்வே எண்.350/28 மற்றும் 29 என்றால் சரிதான்.

8. 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.350/30 பாத்தியம் என்றால் சரிதான்.

9. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் மற்றும் அறிக்கையின் விவரம் தெரியும் என்றால் சரிதான்.

10. வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த நீ.ம.சா.ஆ.4 அறிக்கையில் பத்தி எண் 6ல் 2ம் தபசில் சொத்தானது சர்வே எண். 350/30ல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

11. நீ.ம.சா.ஆ.4 ற்கு என் தரப்பில் என் வழக்கறிஞர் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

12. கடந்த 21.09.2023 மற்றும் 22.09.2023ம் தேதி நான் சென்னைக்கு என் மகனை பார்க்கச் சென்ற போது 1ம் பிரதிவாதி 2ம் தபசில் சொத்தின் சுவற்றில் அலமாரி வைத்து மின் இணைப்பு பெற்றது சம்மந்தமாக நான் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

13. நான் இவ்வழக்கில் புலவரைபடம் மற்றும் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. நான் இவ்வழக்கில் மாவட்ட ஆட்சித் தலைவரை சேர்க்காததால் என் வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. 2ம் தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் ஏற்படாததால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

16. என் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி